## DEPOSITION OF WITNESS

**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**In the Court of the Judicial Magistrate No. II (FTC) at Magisterial Level, Madurai.**

| | | |
|---|---|---|
| **Calendar** | **:** | **STC.1/2018** |
| **Miscellaneous Special case** | | |
| **Deposition of witness for** | | |
| | | **Prosecution PW2** |
| | | **Defence** |
| | | **Court** |

| | |
|---|---|
| **Name** | **: சீராளன்** |
| **Father's name** | **: குலேந்திரன்** |
| **Address** | **: கிளை மேலாளர், பாரத வங்கி கே.கே.நகர்** |
| **Caste** | **: மதுரை** |
| **Calling** | **:** |
| **Religion** | **: இந்து** |
| **Age** | **: 38** |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 8.7.2019

ம.சா.2 முதல் விசாரணை

நான் பாரத வங்கி கே.கே.நகர் கிளையில் கிளை மேலாளராக உள்ளேன். அழைப்பாணையின் பேரில்தான் சாட்சியம் அளிக்கிறேன். எங்கள் வங்கியில் ஆரோக்கியம் என்பவர் சேமிப்பு கணக்கு வைத்துள்ளார். அவரது 1.7.17 முதல் 31.12.17 வரையிலான வங்கி கணக்கு பட்டியலை தாக்கல் செய்கிறேன். அது ம.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ம.சா.ஆ.9ல் 16.10.17 அன்று வங்கி கணக்கில் போதிய பணமில்லை என காசோலை திருப்பப்பட்டதற்கான குறிப்பு உள்ளது. ம.சா.ஆ.1 வழக்கு காசோலையானது எங்கள் வங்கிக்குரியது ஆகும்.

குறுக்கு விசாரணை

எதிரி ஆரோக்கியம் 2005ம் ஆண்டு எங்கள் வங்கியில் கணக்கு துவங்கியதாக ஆவணத்தை பார்த்தேன். எதிரிக்கு எந்த தேதியில் காசோலை புத்தகம் வழங்கப்பட்டது என்ற விபரம் தெரியாது. வழக்கு காசோலை எத்தனை முறை திருப்பப்பட்டுள்ளது என்றால் தற்போது தாக்ல் செய்துள்ள ம.சா.ஆ.9ல் கண்டறியப்படவில்லை. எதிரி ஆரோக்கியம் என்பவரின் 1.8.17 முதல்

31.1.17 வரையிலான வங்கி வரவு செலவு விபரம் மட்டும் கொண்டு வரச்சொல்லி அழைப்பாணை வந்தது என்றால் சரிதான். சி.டி.எஸ் காசோலைக்கு காலவரம்பு கிடையாது. ம.சா.ஆ.1 வழக்கு காசோலை சாட்சியிடம் காட்டப்பட்டு எந்த தேதியில் வழங்கப்பட்டது என்று கேட்டபோது ஆவணங்களை பார்த்தால் சரியாக சொல்லமுடியும் என்கிறார். பொதுவாக ஒரு காசோலையை மூன்று முறை வசூலுக்கு தாக்கல் செய்யலாம். எதிரி ஆரோக்கியம் அவரது கணவர் அவரது காசோலையை அடித்து பெற்றுச்சென்றதாக நடவடிக்கை எடுக்கக்கோரி வங்கியில் புகார் கொடுத்த விபரம் பற்றி தெரியுமா? என்றால் தெரியாது.